நல்லூர் - 01 - 1159

Nallur.

# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 06 | சைவநெறி<br>பெயர் / சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>1.30 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. ஓங்கார மூர்த்தியாக விளங்குபவர்
    1) விநாயகர் 2) சிவபெருமான் 3) முருகப்பெருமான் 4) வைரவர்

02. பாலபாடம் என்னும் நூலை எழுதியவர்
    1) தாயுமானவர் 2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
    3) அருணகிரிநாதர் 4) அபிராமிப்பட்டர்

03. ஆளுடையபிள்ளையார் என அழைக்கப்படுபவர்
    1) மாணிக்கவாசகர் 2) சுந்தரர் 3) திருஞானசம்பந்தர் 4) திருநாவுக்கரசர்

04. ஐப்பசி மாதத்தில் வரும கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசித் தினத்தில் கொண்டாடும் பண்டிகை
    1) ஆடிப்பிறப்பு 2) கிருஷ்ணஜெயந்தி 3) தைப்பொங்கல் 4) தீபாவளி

05. விபூதியை மூன்று குறியாகத் தரிப்பது
    1) உத்தூளனம் 2) திரிபுண்டரம் 3) பசிதம் 4) பசுமம்

06. "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக் கூறியவர்
    1) ஔவையார் 2) திருவள்ளுவர் 3) பாரதியார் 4) புனிதவதியார்

07. அடியார் வேடம் பூண்டு மாறனார் இல்லம் வந்தவர்
    1) திருமால் 2) பிரமா 3) சிவபெருமான் 4) வீரபத்திரர்

08. திருநாவுக்கரசர் சூலைநோய் நீங்கப் பாடிய பதிகம்
    1) எண்ணுகேன் என்சொல்லி ..... 2) மாசில் வீணையும் ......
    3) சொற்றுணைவேதியன் ...... 4) கூற்றாயினவாறு ......

09. 'வெற்றி வேற்கை' என்னும் நூலை இயற்றியவர்
    1) கூன் பாண்டியன் 2) அதிவீரராம பாண்டியன்
    3) அரிமர்த்தன பாண்டியன் 4) நின்றசீர் நெடுமாறன்

10. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு அடங்கும் திருமுறை
    1) 1 ஆம் திருமுறை 2) 7 ஆம் திருமுறை
    3) 9 ஆம் திருமுறை 4) 8 ஆம் திருமுறை

11. அகத்தியரின் கமண்டலத்திலிருந்த ஆற்று நீர்
    1) கங்கை ஆறு 2) யமுனை ஆறு 3) வைகை ஆறு 4) காவிரி ஆறு

12. குடுமித்தேவர் வீற்றிருந்து அருள்பாலிக்கும் இடம்
    1) திருவெண்ணாமலை 2) திருக்காளத்திமலை 3) கதிரைமலை 4) சிதம்பரம்



kalvi.lk

13. மூவகைத் திருமேனிகளாவன
1) அருவம், உருவம், அருவுருவம்
2) ஆணவம், கன்மம், மாயை
3) பதி, பசு, பாசம்
4) மனம், வாக்கு, காயம்

14. இடப வாகனமும் யானைத்தோற் போர்வையும் கொண்டவர்
1) விநாயகர் 2) சிவபெருமான் 3) முருகன் 4) திருமால்

15. அன்னம் பாலிக்கும் தேவாரம் பாடப்படும் சந்தர்ப்பம்
1) பஞ்சபுராணம் ஓதும் போது
2) ஆலயப் பூசை வேளையில்
3) உணவு உண்பதற்கு முன்பு
4) விசேட வைபவங்களின் போது

16. சிவசின்னங்களில் ஒன்று
1) விபூதி 2) குங்குமம் 3) சந்தனம் 4) பிரசாதம்

17. இறைவனிடம் படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியவர்கள்
1) மாணிக்கவாசகர், சுந்தரமூர்த்திநாயனார்
2) சுந்தரமூர்த்திநாயனார், திருஞானசம்பந்தர்
3) திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர்
4) சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகர்

18. ஐம்பொறிகளாவன
1) மெய், வாய், கண், மூக்கு, செவி
2) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
3) பால், தயிர், நெய், கோசலம், கோமயம்
4) ந, ம, சி, வா, ய

19. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன அடங்கும் தொகுதி
1) கந்தபுராணம் 2) பெரியபுராணம் 3) பஞ்சபுராணம் 4) சிவபுராணம்

20. திருவாதவூரர் என்னும் பிள்ளைத் திருநாமம் கொண்டவர்
1) மாணிக்கவாசகர்
2) திருஞானசம்பந்தர்
3) திருநாவுக்கரசர்
4) சுந்தரமூர்த்திநாயனார்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட, மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப் பாடல்களில் விரும்பிய இரண்டை எழுதி, பாடியவர் பெயர், பாடப்பட்ட தலம் எனபனவற்றையும் தருக.
1) "பித்தாப் பிறை சூடி...."
2) "ஒளிவளர் விளக்கே...."
3) "பூசுவதும் வெண்ணீறு...."
4) "சீரும் திருவும்...."

(8 + 1 + 1 x 2 = 20 புள்ளிகள்)

02. "தெய்வீகத்தன்மை வாய்ந்தவை திருமுறைகளாகும்."
1) நம்பியின் தந்தையார் வாழ்ந்த ஊர் எது? இவர் யாருக்குப் பூசை செய்து வந்தார்?
2) நம்பி மனம் வருந்தி தமது தலையினைக் கல்லிலே மோதச் சென்றமைக்கான காரணம் யாது? தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னன் யார்?
3) நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளைப் பாடியவர் யார்?
4) மாணிக்கவாசக சுவாமிகள் பாடியவை யாவை?

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)



kalvi.lk

03. "சைவசித்தாந்தம் என்பது முடிந்த முடிவாகும்."

1) சைவசித்தாந்தம் குறிப்பிடும் முப்பொருள்களும் எவை?

2) பதிக்குக் கூறப்படும் இரண்டு இலக்கணங்களும் எவை? மும்மலங்களும் எவை?

3) பாசம் உயிரை மாசுபடுத்துவதனால் அதற்கு வழங்கப்படும் பெயர் யாது? பாசத்தால் கட்டுண்டது எது?

4) உயிர்கள் பாசத்திலிருந்து விடுபட யாது செய்ய வேண்டும்? உயிர்களின் இறுதி இலட்சியம் யாது?

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)

04. "எளிமையான வழிபாட்டு முறைகளைக் கொண்ட நாட்டார் வழிபாடு"

1) நாட்டார் வழிபாட்டிலே காணப்படும் ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் என்பவற்றைத் தருக?

2) இலங்கையில் நாட்டார் வழிபாடு காணப்படும் இடங்கள் எவை?

3) நாட்டார் வழிபாட்டுச் சடங்கை நடாத்துபவர் யார்?

4) சிறு தெய்வக் கோயில்கள் பெரும்பாலும் காணப்படும் இடங்கள் எவை? அதன் சிறப்புகள் யாவை?

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)

05. "சமய குரவர்களும் அற்புதங்களும்"

1) தோடுடைய செவியன் என்னும் திருப்பதிகத்தைப் பாடிய சமய குரவர் யார்? இவர் தனது எத்தனையாவது வயதிலே இத் திருப்பதிகத்தைப் பாடினார்?

2) சமண சமயத்தில் சேர்ந்து சமண சமயக் குருவாகத் திகழ்ந்த சமய குரவர் யார்? இவரின் குருபூசைத் தினம் எது?

3) இறைவன் கிழப்பிராமண வடிவில் வந்து மணப்பந்தலில் யாருடன் வாதம் புரிந்தார்?? வன்றொண்டர் என்ற பெயரைக் கொண்ட நாயனார் முதற் பாடிய பதிகம் யாது?

4) திருவாசகம் பாடியவர் யார்,? சமய குரவர்கள் முத்தியடைந்த வயதைக் குறிப்பிடுக?

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)

06. பின்வரும் தலைப்புகளுள் விரும்பிய இரண்டைத் தேர்ந்தெடுத்து சிறுகுறிப்பு எழுதுக.

1) சைவ இல்லம்

2) ஆலய வழிபாடு

3) இளையான் குடிமாற நாயனார்

4) ஞானப்பிரகாச முனிவர்

(5 ½ + 5 ½ =11 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

**075 287 1457**